[10th March 1969

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தேர்தல் சீட்டுக்களை வழங்கிக் கொண்டிருந்த இடத்தில், அந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக, காங்கிரஸ் தொண்டர்கள் இடையே கைகலப்பு நடந்து கலவரம் ஏற்பட்டது. அப்போது அங்கே அதைத் தவிர்க்கும் பொருட்டு போலீசார் வந்து கலைந்துபோகும்படி கூட்டத்தைக் கலைத்திருக்கிறார். அதில் தான் தாக்கப்பட்டதாக திரு. அய்யாசாமி அவர்கள் புகார் கொடுத்தார். புகார் கிடைத்ததின் பேரில் விசாரித்ததில் அவர் தாக்கப்படவில்லை என்ற விவரம் தெரிய வந்தது.

Teleprinter.

* 166 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state the names of Ministers of Tamil Nadu in whose residences Teleprinters have been installed at Government cost?

தந்தி முறை தட்டச்சுப் பொறி.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழக அமைச்சர்கள் யார் யார் இல்லத்தில் அரசாங்கச் செலவில் டெலிபிரிண்டர் வைக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: முதலமைச்சர் அவர்களின் இல்லத்தில் மட்டும் அரசாங்க செலவில் பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா நிறுவனத்தாரின் தந்தி முறை தட்டச்சுப் பொறி ஒன்று பொறுத்தப்பட்டுள்ளது.

Urban Land Tax.

* 167 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Finance be pleased to state whether the details regarding the amount of Urban Land Tax, collected every year from the date of its introduction up to 31st March 1968, be placed on the Table of the House?

நகர்புற நிலவரி.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

"அர்பன் லாண்டு டாக்ஸ்" போட்டு, அமுலுக்கு வந்த தேதியிலிருந்து 1968 மார்ச் 31-ஆம் தேதிவரை, ஆண்டுதோறும் வசூலான தொகை விவரம் சபையில் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மன்றத்தின் முன் விவர அறிக்கை[a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, இந்த வரி செல்லாது என்று உத்தரவிட்டுவிட்ட காரணத்தால் யாரிடம் அதை வசூலித்தார்களோ அதைத் திருப்பிக் கொடுக்க அரசு முயற்சிக்குமா?

---

[a] Printed as Appendix I on page 568